**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 111/2018 |
| | | D/W's | : | DW1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | U. சாரதி | CASTE | : | |
| W/O. | உலகநாதன் | RELIGION | : | இந்து |
| VILLAGE | சோழவந்தான் | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 50 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.04.2025**

**குறுக்கு விசாரணை**

1. நான் எம்.ஏ பி.எட்., படித்து உள்ளேன். எனக்கு 2000ம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு முன் எனது சொந்த ஊரான திண்டுக்கல் மாவட்டம் வத்தல்பட்டியில் இருந்தேன். வாதி வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்று எனக்குத்தெரியும். நான் தற்போது தனியார் பள்ளி ஆசிரியராக பணிபுரிகிறேன். வழக்கில் என்னைத் தரப்பினராக சேர்த்து பிராதில் திருத்தம் செய்தபிறகு எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை.

2. தாவா சொத்தின் சர்வே எண் 52/1A மற்றும் 52/1B. இந்த வழக்கில் முதலில் எனது கணவர்தான் எதிர்உரை தாக்கல் செய்துள்ளார், எனது கணவர் எதிர்உரையில் என்ன தாக்கல் செய்தார் என்று நேரிடையாக எனக்குத்தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் தாக்கல் செய்த எதிருரையின் அடிப்படையில் எனது வழக்கறிஞர் தயார் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தில்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3. எனது மாமியார் அமிர்தம் மற்றும் மாமனார் ராமு ஆகியோருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து பாகம் பிரிக்கப்பட்ட விவரங்கள் எனக்குத்தெரியும். பாகம் பிரிக்கப்பட்ட சமயத்தில் நடந்த பேச்சுவார்த்தை நான் கலந்துகொள்ளவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3ல் எனது கணவரின் கையெழுத்து இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 பத்திரத்தில் உள்ள கையெழுத்து வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப்பத்திரத்தில் உள்ள எனது கணவரின் கையெழுத்து போல இல்லை.

4. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப்பத்திரத்தில் B Schedule–ல் 4 வது இலக்கச்சொத்தை எனது கணவர் லெட்சுமி என்ற விஜயலெட்சுமியிடம் வா.சா.ஆ.6 அடமானப்பத்திரம் மூலம் அடமானம் வைத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 அடமானப்பத்திரத்தை எனது கணவரும், வாதியும் சேர்ந்துதான் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப் பத்திரத்தின்படி B Schedule 4 வது இலக்கச்சொத்தையும் C Schedule 3 வது இலக்கச்சொத்தையும் ஒன்றாகச்சேர்த்து தான் அடமானம் வைத்தனர் என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.6 ஈடுகடன் பத்திரத்தின் 6 வது பக்கத்தில் " மேற்படி சொத்தில் உள்ளதும் 1 வது நபருக்கும், 2 வது நபருக்கும் சமபாகமான கிணறு, மின்மோட்டார் தண்ணீர் ரூம் வகையறா முழு பாத்தியமும் சேர்த்து தங்களுக்கு ஈடு பாத்தியம் " என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ல் ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில் எனது கணவரும், வாதியும் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் 52/1, 52/1A. 52/1**B** ஆகிய சொத்துக்களை ஆளுக்கு 3 வருடங்களுக்கு அனுபவம் செய்து கொள்வதாக ஒப்புக்கொண்டு அதன்படி எனது கணவர் முதல் 3 ஆண்டுகள் மேற்படி சொத்துக்களை அனுபவம் செய்தார் என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.7 ஒப்பந்த பத்திரத்தில் எனது கணவரும், வாதியும் ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஒப்பந்தப்பத்திரத்தில் சொத்து விவரத்தில் 2 வது அயிட்டத்தில் " பொதுக்கிணற்றில் பேர்பாதி பாத்தியமும், மின்மோட்டார், மின்இணைப்பும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னிடம் காண்பிக்கப்படும் பத்திரத்தைபோல் எங்களிடம் பத்திரம் இல்லை. எனது கணவர் இறக்கும்வரை தாவா சொத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல.

7. பாகம்பிரிவினைக்கு முன்புவரை சர்வே எண் 52/1A ல் உள்ள கிணற்றில் இருந்துதான் சர்வே எண் 52/1 52/1B. மற்றும் 52/1C க்கு பாசனம் செய்வார்கள் என்றால் சரிதான். வாதி இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்புவரை சர்வே எண் 52/1A ல் உள்ள கிணற்றில் இருந்துதான் சர்வே எண் 52/1C க்கு பாசனம் செய்யப்பட்டது என்றால் எந்த வருடம் தண்ணீர் நின்றது என்று எனக்குத்தெரியாது.

8. சர்வே எண் 52/1A உள்ள கிணற்றுக்கு தற்போது வரை எனது மாமனார் பெயரில்தான் மின்இணைப்பு உள்ளது என்றால் சரியல்ல, எனது கணவர் பெயரில்

உள்ளது. மின்இணைப்பு எந்த தேதியில் எனது கணவர் பெயருக்கு மாற்றப்பட்டது என்று எனக்குத்தெரியாது. மேற்படி கிணற்றுக்குள்ள தற்போதைய மின் இணைப்பு எண் எனக்குத்தெரியாது. மேற்படி மின்இணைப்பு எண் இந்த வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் எனது கணவர் பெயருக்கு மாற்றப்பட்டது என்றால் எனக்குத்தெரியாது.

9. எதிர் வழக்குரையில் உள்ள விவரங்கள் எனக்கு நேரிடையாக தெரியாததால் அதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தில் எனது கணவர் வாதியுடன் அதிலுள்ள நடைபாதை, தண்ணீர்பாசனம், மின்இணைப்பு ஆகியவற்றைப்பொறுத்து ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தை வழக்கிற்காக மறுத்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் நான் தரப்பினர் இல்லை என்பதால் அதைப்பொறுத்து நான் சொல்லும் சாட்சியம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல.

10. தாவா சொத்து மற்றும் அதில் உள்ள கிணறு மற்றும் மின்இணைப்பையஹம வாதியும், எனது கணவரும் சேர்ந்து அனுபவம் செய்வதாக வா.சா.ஆ.3,6,7 ஆவணங்கள் மூலம் எனது கணவர் ஒப்புக்கொண்டு அவரும் வாதியும் அனுபவம் செய்தார்கள் என்றாலும் அதை நான் வழக்கிற்காக மறுத்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/–M.P. Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.